# ????????? ????????, ????????
# ?????????????????? ?????????? ????
# ?????????????




யுத்தத்தில் தமது உடல் உறுப்புக்கள் பாதிப்படைந்து, மாற்றுத்திறனாளிகளாக வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழ்ந்துவரும் முன்னாள் போராளி மற்றும் குடும்பத்தலைவர்களை இழந்த மாவீரர் குடும்பங்களுக்கு நமது ஈழநாடு வாழ்வாதார திட்டத்தின் கீழ் தொடர்ந்து வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

அந்த அடிப்படையில் இந்தமாதம் தெரிவு செய்யப்பட்ட 10 குடும்பங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சங்கத்தின் தலைவரான சரவணன் அவர்கள் நமது ஈழநாடு வாழ்வாதார திட்டத்திடம் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக, லண்டனில் உள்ள மனித உரிமைகள் செயற்பாட்டாளர் கீத் குலசேகரம் அவர்களின் ஏற்பாட்டில் இந்த உதவி வழங்கி வைக்கப்பட்டது. இதற்கான நிதி உதவியை மனிதநேய தொண்டரான மனோச் பிரசன்னா அவர்கள் நன்கொடையாக வழங்கி உதவியிருந்தார்.

இவ்வாறாக, முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் உதவிகளை நமது ஈழநாடு அறக்கட்டளை ஊடாக, திரு கீத் குலசேகரம் அவர்கள் தொடர்ந்து செய்து வருவது குறிப்படத்தக்கது.


ஈழநாடு
உதவித்திட்டம்


நமது
ஈழநாடு
உதவித்திட்டம்


நமது


நமது
ஈழநாடு
உதவித்திட்டம்


நாடு
உதவித்திட்டம்


நாடு

# ????????? ????????? ?????????? ???????? ????????? ?????????????



சர்வக்கட்சி அரசாங்கம் அமைப்பது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் இன்று கலந்துரையாடல் முன்னெடுக்கபடவுள்ளது.

அரசியல் கடசிகளுடனான தனிப்பிட்ட கலந்துரையாடல்கள் பெரும்பாலும் நிறைவடைந்துள்ளன. குறித்த கலந்துரையாடல்களில் பேசப்பட்ட விடயங்கள் அனைத்து கட்சிகளுக்கும் தரவுகளாக சமர்ப்பிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கட்சிகள் மட்ட பொது கலந்துரையாடல் இன்று நடைபெறவுள்ளது. இந்த கலந்துரையாடலில் பல்வேறு கட்சிகளும் பங்கேற்கவுள்ளதாக அறிவித்திருந்தன.

# ???? ?????????????? ????????????

# ???????



முன்னாள் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தென்கிழக்கு ஆசிய நாடான தாய்லாந்துக்கு நாளை செல்லவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

போராட்டத்தை அடுத்து இலங்கையின் வெளியேறிய கோட்டாபய ராஜபக்ஷ மாலைதீவு வழியாக சிங்கப்பூருக்கு சென்றிருந்தார்.

இந்நிலையில் சிங்கப்பூரில் இருந்து தாய்லாந்து வருவார் என எதிர்பார்க்கப்படுவதாக இரண்டு ஆதாரங்களை மேற்கோளிட்டு ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

---

# ???????, ???????????? ?????????? ?????????



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ உள்ளிட்டவர்களுக்கு விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத்தடை நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 5ஆம் திகதி வரை பயணத்தடையை நீடிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.